இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 15.06.2026

# ஒற்றுமையைக் குலைத்தவரே ராகுல் தானே?

ஒற்றுமையைப் பற்றி ராகுல் வகுப்பு எடுத்துள்ளார். இது காலம் கடந்த ஞானோதயம் ஆகும். இந்த ஒற்றுமையை ஒவ்வொரு மாநிலத்திலும் கெடுத்தவரே ராகுல்தானே?

இந்தியா கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் தான் ஆற்றிய உரையை ராகுல் காந்தி, சில நாட்கள் கழித்து வெளியிட்டு இருக்கிறார். ஜூன் 8 ஆம் தேதி நடந்த கூட்டத்தில் தான் என்ன பேசினேன் என்பதை ஜூன் 11 ஆம் தேதி வெளியிட்டு இருக்கிறார் ராகுல். இந்தியா கூட்டணிக் கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகள், காங்கிரஸ் மீது வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பொதுவெளியில் அதிகம் பரவியதால் தனது உரையை வெளியிட வேண்டிய நெருக்கடி ராகுலுக்கு ஏற்பட்டுள்ளது.

**எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் ராகுல் எப்படி நடந்து கொண்டார் என்பதை இடதுசாரிகளும், சமாஜ்வாடி கட்சியும், ராஷ்டிரிய ஜனதா தளமும் கடுமையான விமர்சனங்கள் வைத்துள்ளன.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் ஆற்றிய உரை மிக முக்கியமானது. கேரளாவில் காங்கிரஸ் கட்சியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிரெதிராக போட்டியிட்டன. இரண்டும் சம செல்வாக்கு உள்ள கட்சிகள் ஆகும். அவை இரண்டும் நேருக்கு நேராக மோதியதை யாரும் குறை சொல்லவில்லை. ஆனால் ராகுல் காந்தி வைத்த குற்றச்சாட்டு அபத்தமானது. 'பினராயி விஜயனை மோடி ஏன் கைது செய்யவில்லை? இரண்டு பேருக்கும் ரகசிய ஒப்பந்தம் உள்ளது' என்று பேசினார் ராகுல். இதைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான குற்றச்சாட்டாக வைக்கிறது.

**"இடது சாரிகளுக்கும் பா.ஜ.க.வுக்கும் இடையே ஒரு ரகசிய உடன்பாடு இருப்பதாக ராகுல் காந்தி, கேரள மாநில சட்டசபை பரப்புரையின் போது அப்பட்டமான பொய்களைப் பேசினார். இடதுசாரிகளுக்கும் பா.ஜ.க.வுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் இருப்பதாகப் பேசினார். இடது சாரிகளின் பா.ஜ.க. எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு காங்கிரஸிடம் இருந்து சான்றிதழ் தேவையில்லை"** என்று ராகுல் முன்னிலையில் குற்றம் சாட்டினார் மார்க்சிஸ்ட் எம்.பி. ஜான் பிரிட்டாஸ்.

"இடதுசாரிகள் இப்போது இடதுசாரிகளாக இல்லை" என்று ராகுல் சொன்னதைக் குறிப்பிட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா, 'இது ராகுலின் அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகிறது' என்று விமர்சித்தார். 'இல்லை, உண்மைகளின் அடிப்படையில்தான் நான் அப்படிச் சொன்னேன்' என்று குறிப்பிட்ட ராகுல், 'அதானியை கேரளாவுக்கு கொண்டுவந்தது இடதுசாரி அரசே' என்று வாதிட்டார். 'அதானியை கேரளாவுக்கு கொண்டு வந்தது காங்கிரஸ் அரசு தான்' என்று இடதுசாரி அமைப்பினர் பதில் அளித்துள்ளார்கள்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் பேசும் போது, **"இந்தியா கூட்டணியில் இருந்து தி.மு.க. மற்றும் ஆம் ஆத்மி விலகி இருப்பது மிகப் பெரிய பின்னடைவு. இந்தியா கூட்டணி இதே வழியில் தொடர வேண்டுமா என்பது குறித்து தீவிரமாக ஆராய வேண்டும்"** என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

**"பீகார் மாநிலத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பா.ஜ.க. தலைவர்களுக்கும் இடையே பல பிரச்சினைகளில் ரகசிய உடன்படிக்கைகள் இருந்தனவா என்பது குறித்து எனக்கு சந்தேகம் இருக்கிறது. இது பற்றி காங்கிரஸ் தலைமையிடம் பலமுறை குறிப்பிட்டும் நிலைமையைச் சரி செய்ய அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை"** என்று ராஷ்டிரிய ஜனதா தளத் தலைவர் தேஜஸ்வீ சொல்லி இருக்கிறார்.

'பினராயி விஜயனை என்னால் கட்டியணைக்க முடியாது' என்று சொல்லி இருக்கிறார் ராகுல். அவர் தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடியைக் கட்டி அணைத்தவர் ஆயிற்றே! அந்தக் காட்சியை மறக்க முடியுமா?

**"யாரும் ராகுல் காந்தியை பினராயி விஜயனை கட்டியணைக்கச் சொல்லவில்லை. மாறாக, பினராயி விஜயன் மற்றும் பிற எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்யக் கோருவதன் மூலம், அவர் அமலாக்கத்துறைக்கும் மோடி அரசுக்கும் ஒரு உதவியாளராகச் செயல்படுவதை நிறுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். அது எதிர்க்கட்சித் தலைவரின் வேலை அல்ல"** என்று மார்க்சிஸ்ட் பொதுச்செயலாளர் பேபி மீண்டும் குற்றம் சாட்டி இருக்கிறார். இதற்கு ராகுலின் பதில் என்ன?

தமிழ்நாட்டில் நடந்த கதை ஊரறிந்தது ஆகும். தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்டே காங்கிரஸ் செய்த கழுத்தறுப்புகள் ராகுல் ஆசீர்வாதத்துடன் செய்யப்பட்டவையே ஆகும். இன்றைக்கு அவர்கள் சேர்ந்துள்ள கட்சியின் தலைவர், 'இந்தியா கூட்டணிக்குள் வர மாட்டேன்' என்று பெப்பே காட்டியதும்தான், ராகுல் காந்தி நல்லபிள்ளை வேஷம் போடுகிறார். 'நான் 100 விழுக்காடு உண்மையாக இருப்பேன். இப்போதே தி.மு.க.வுக்கு உத்தரவாதம் தருகிறேன்' என்கிறார் ராகுல்.

சட்டமன்றத் தேர்தல் நடக்கும் மாநிலங்களில் எல்லாம் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளை ஆட்சிக்கு வர விடாமல் தடுக்க எல்லா கீழ்த்தரமான வேலைகளையும் பார்த்து விட்டு, நாடாளுமன்றத் தேர்தல் வரும் போது, 'புலிக்கு பயந்தவர்கள் என் மேலே படுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்வதைப் போல ஆதரவைத் தேடுவதற்கு வெட்கமாக இல்லையா?

தி.மு.க.வை காங்கிரஸ் நடத்திய விதம் குறித்து அகிலேஷ், தேஜஸ்வீ, உமர் அப்துல்லா, தேசியவாத காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை அனைத்தும் காங்கிரஸ் கட்சி மீது குற்றச்சாட்டுகளை வைத்துள்ளார்கள்.

இதனை ராகுல் எதிர்பார்க்கவில்லை. பா.ஜ.க.வை எதிர்ப்பதற்காகக் கூடிய கூட்டத்தில் காங்கிரஸ் எதிர்ப்புதான் அதிகமாக பேசப்பட்டிருப்பதற்கு பொறுப்பேற்க வேண்டியது ராகுலின் முதிர்ச்சியின்மையும், நேர்மையின்மையுமே காரணம் ஆகும்.

'இந்தியா கூட்டணிக் கட்சிகள் காங்கிரஸ் மீது வைக்கும் விமர்சனங்கள் ஏற்கப்படும்" என்று ராகுல் சொல்லி இருக்கிறார். இவர் இனி விமர்சனங்களை ஏற்றால் என்ன? ஏற்காமல் போனால் என்ன? 'சிவன் விஷத்தைக் குடித்ததைப் போல அனைத்து விமர்சனங்களையும் காங்கிரஸ் விழுங்கிக் கொள்ள வேண்டும்' என்கிறார் ராகுல்.

**அவர் சொல்லும் புராணக் கதைப்படியே பார்த்தாலும் விஷத்தை சிவன் உருவாக்கவில்லை. தேவர்களும், அசுரர்களும்தான் உருவாக்கினார்கள். அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்த போது விஷம் வந்தது. அதனை சிவபெருமான் குடித்தார். ஆனால் 'இந்தியா'க் கூட்டணிக்குள் அமுதமாக இல்லாமல் விஷத்தையே கடைந்தது யார்?**

●●

## வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு தந்த நீதிபதிக்குப் பாராட்டு!

# ஆணவக் கொலைகளைச் சட்டப்படியான - கடுமையான தண்டனைகள் மூலம் தடுப்பது அவசியம் - அவசரம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை, ஜூன் 15-*

*ஆணவக் கொலைகளைச் சட்டப்படியான கடுமையான தண்டனை மூலம் தடுப்பது அவசியம், அவசரம்! இந்தக் கொலை வழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு தந்த நீதிபதிக்குப் பாராட்டுகள்! இந்த உத்தரவு விரைந்து வினையாற்ற அரசிற்கு நல்வாய்ப்பாக அமைய வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:*

*தூத்துக்குடி மாவட்டத்தில் தமது சொந்த மகள், மென் பொறியாளரான வேறு ஒரு ஜாதியைச் சேர்ந்தவரைக் காதலித்ததை ஒப்புக் கொள்ளாமல், ஜாதி வெறியின் காரணமாக அப்பெண்ணின் தந்தை, தனது மகனுடனும், மனைவியுடனும் நடத்திய ஆணவக் கொலைக்குக் காரணமாக அமைந்தார். அவரது ஜாமீன் மனு மீதான வழக்கில், ஜாதி ஆணவ வெறி எப்படித் தாய், தந்தை, மகள் என்ற பாசத்தையே பலி பீடத்திற்குக் கொண்டு போய் நிறுத்திடும் கொடுமையாக்கி, உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் கள்ளமும், பள்ளமும் எப்படி ஆட்டுவிக்கிறது என்பதைச் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி புகழேந்தி அவர்கள் நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். ஜாதி ஆணவ மனப்போக்கு, நமது சமூகத்தில் - பாசத்தைக்கூட கொன்று தின்றுவிடும் பேராபத்து எப்படி கடும் தொற்று நோயாக ஆகின்றது என்பதை மிக மிகத் தெளிவுடனும், வலியுடனும் அரசுகளுக்கு நல்ல அறிவுறுத்தலாகத் தமது தீர்ப்பை அருமையாகத் தந்துள்ளார்.*

*தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையாக இது சட்டப்படி கருதப்பட முடியாது என்பதை ஆணவப் படுகொலை வழக்குகளில் உச்சநீதிமன்றம் தந்துள்ள தீர்ப்புகளும், அது அறிவுறுத்தியுள்ள தனிச் சட்டத்திற்கான தேவைகளும், ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கு வலியுறுத்தியுள்ள வழிமுறைகளுமே சான்று. ஆணவப் படுகொலை என்பது நம் சமூகத்திடையே பரவி உலுக்கும் வர்ணாஸ்ரமப் பண்பாட்டுப் படையெடுப்பின் தீய விளைவே!*

*இதற்கான மூல வேர் எங்கே உள்ளது என்பதைக் கண்டறிய வேண்டும் அரசுகளும், அறிவார்ந்த முற்போக்காளர்களும்! புத்தரும், வள்ளுவரும், வடலூர் வள்ளலாரும் முன்பு எழுதினர். 100 ஆண்டுக் கால சுயமரியாதை இயக்கம் நடத்தி வந்த ஜாதி - தீண்டாமை ஒழிப்புக்கான பல்வேறுத் தொடர் போராட்டங்கள் - தென்னாட்டில் திராவிட இயக்கங்கள், முற்போக்காளர்கள், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், வள்ளலார், அய்யா வைகுண்டர் போன்றவர்களின் எழுத்து, பிரச்சாரப் போராட்டங்கள் மூலம் பெரும் அளவு விழிப்புணர்வு ஏற்பட்டும் கூட இன்னமும் இப்படியா? சில புரியாதவர்கள் "அவர்கள் தோற்று விட்டனர்" என்று அவசர முடிவுடன் அவதூறு பரப்பவும் இந்த ஆணவக் கொலை நிகழ்வுகள் காரணமாக அமைந்து விடுகின்றன. (கடந்த 10 ஆண்டுகளில் 59 ஆணவக் கொலைகள் நடந்தாக நீதிபதி அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்).*

*மருத்துவக் கல்லூரிகள், மருத்துவ ஸ்பெஷலிஸ்டுகள் எல்லாம் இருந்தும் கூட எப்படி 2021இல் கரோனா - (கோவிட்- 19) தொற்றுப் பரவி, உலகையே உலுக்கிய தொடர் மரணங்கள் ஏற்பட்டன! அதனால் மருத்துவர்கள் தோற்றுவிட்டனர்; பயனற்றுப் போய் விட்டனர் என்று கூறினால் அது அறிவுடைமையா?*

*அதுதான் மேற்சொன்னதற்கும் விடை. என்றாலும் அண்ணல் காந்தியார் அவர்களைக் கோட்சே என்ற பார்ப்பன ஹிந்து மதவெறியன் சுட்டுக் கொன்றபோது, நம் மக்கள் நிதானமிழந்து விடாமல், மதக் கலவரமோ, ஜாதிக் கலவரமோ பரவி விடாமல் தடுக்கத் தந்தை பெரியார் ஒன்றை நினைவூட்டினார் - ஆத்திரப்பட்ட மக்களிடம்!*

**கடுமையான தண்டனைகள் மூலம் தடுப்பது அவசியம் அவசரம்!**

*" காந்தியைச் சுட்டத் துப்பாக்கியைத் தண்டிப்பதைவிட, அதைப் பிடித்த கை 'மதவெறி' என்பதால், அதனை நோய் நாடி, நோய் முதல்நாடி ஒழிக்க அறிவு பூர்வமாகச் சிந்தித்தும், இந்த வெறித்தனத்தினை முடிவுக்குக் கொண்டு வர அனைவரும் முன்வர வேண்டும்" என்று அறிவுரை கூறி அமைதி ஏற்படுத்தினார் தந்தை பெரியார். (சான்று: 'புதியதோர் உலகு செய்வோம்' நூல், தந்தை பெரியார்)*

*ஆணவக் கொலைகளைச் சட்டப்படியான கடுமையான தண்டனைகள் மூலம் தடுப்பது அவசியம் - அவசரம்.*

*'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நம் இயக்கமும், முற்போக்காளர்களும், ஜாதி ஒழிப்புச் சிந்தனையாளர்களும் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஆணவக் கொலை ஏற்படா வண்ணமும், ஜாதி வெறி, ஜாதி ஆணவத்திற்கு எதிராகவும் வழிமுறைகளை அரசுக்குக் கூற உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஜஸ்டிஸ் திரு. கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் ஓர் ஆணையத்தினை அமைத்த நிலையில் இடையில் - தேர்தல் குறுக்கிட்டு விட்டது. ஆட்சி மாற்றத்தினால் அந்தப் பணி தேக்கமுறக் கூடாது; புதிய அரசு அதன் பணியினை விரைவுப்படுத்தி, அறிக்கையைப் பெற்று கிடப்பில் போட்டு விடாமல் அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆணவக் கொலைத் தடுப்பு விஷயத்தில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியம்.*

*சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி அவர்களது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - போற்றத்தக்க இந்த உத்தரவு விரைந்து வினையாற்ற அரசிற்கு ஒரு நல் வாய்ப்பாக அமைய வேண்டும்.*

**தொடர் நடவடிக்கையில் புதிய ஆட்சி ஈடுபட வேண்டும்!**

*சமூகத்தில் புரையோடிப் போயுள்ள ஒரு முக்கிய சமூகக் கொடுமையான இது படித்தவர்களைக்கூட வெறியாளர்களாக மாற்றிடும் ஒரு சமூகத் தொற்று! இதனைத் தடுக்கச் சட்டமும், சமூகத்தினரும் சேர்ந்து பணியாற்ற வேண்டும். ஜாதிமறுப்பு இணையர்களுக்குப் பாதுகாப்பு தரும் பொறுப்பை காவல்துறை மேற்கொள்ள வேண்டும். ஜாதி - தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தினை நடத்துவோருக்குத் தக்க ஊக்கமும், தக்க பாதுகாப்பும் தருவது பற்றி ஆழ்ந்து யோசித்துச் செயலாற்ற ஆட்சியாளர்களும், கட்சி பேதமில்லா அனைத்து முற்போக்கு ஜாதி ஒழிப்பாளர்களும் முன் வர வேண்டும்.*

*18 வயது இளைஞர்கள் வாக்குச் செலுத்துவது எப்படி தடுக்க முடியாத உரிமையோ, அதைவிட முக்கியம் சட்டப்படி வயது வந்த ஆண், பெண் இருவருக்கும் தாங்கள் விரும்பியவர்களை மணந்து வாழும் உரிமை, அடிப்படை உரிமையாகும். தந்தை பெரியார் அவர்கள் "இதில் மற்றவர் தலையிடுதல் என்பது, தேவையற்ற ஆணவ அதிகாரத்தினைக் காட்டுவது அல்லாது வேறு என்ன?" என்றார் - சிந்தியுங்கள்.*

*சிறப்பான வரலாற்றுத் தீர்ப்பு (Land Mark Judgement) தந்த நீதிபதி அவர்களையும் பாராட்டி, சமூக நல்வாழ்வுக்கும், ஒருங்கிணைப்புக்கும் இத்தீர்ப்பு ஒரு கலங்கரை வெளிச்சமாக, சட்டம் என்ற இருட்டறையை ஒளிமயமாக்கியுள்ளதாக நன்றி கூறுகிறோம்.*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## மாமல்லபுரத்தில் அமைச்சர் ஆய்வின்போது ரீல்ஸ் எடுத்த த.வெ.க. நிர்வாகி!

சென்னை, ஜூன் 15–

மாமல்லபுரத்தில் இருந்து சென்னை செல்லும் கிழக்கு கடற்கரை சாலையையொட்டி டி.டி.டி.சி. ஓட்டல் அமைந்துள்ளது. இங்குள்ள 3 கட்டிடங்களில் 24க்கும் மேற்பட்ட தங்கும் அறைகள் உள்ளது. இங்கு ரூ.20 கோடி மதிப்பில் பயணிகள் தங்கும் அறை, வரவேற்பு அறை, கூட்டரங்கு, பார் வசதி மற்றும் சமையலறையுடன் கூடிய நவீன கட்டிடம் கட்டுவதற்காக சில மாதங்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி நடந்து வருகின்றன. இந்நிலையில், புதிய கட்டிடத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் நேற்று ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். தொடர்ந்து, டி.டி.டி.சி. விடுதி மாடியில் உள்ள கூட்ட ரங்கில் அதிகாரிகளை அழைத்து அமைச்சர் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

அதிகாரிகள் பாதாளச் சாக்கடை, சாலை வசதி, தெரு விளக்கு, போக்குவரத்து இடையூறு, கழிப்பறை மற்றும் குடிநீர்ப் பிரச்சினைகள் குறித்தும், பார்க்கிங் வசதி ஏற்படுத்துவது, சுற்றுலாவை மேம்படுத்த புதிய முயற்சிகள் உள்ளிட்டவைகள் குறித்தும் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

அப்போது, அமைச்சர் ராஜேஷ்குமார் பேசுகையில், மாமல்லபுரத்தை மேம்படுத்த பல்வேறு பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதிகாரிகள் தெரிவித்த புகார்களை முதல்வரின் கவனத்திற்கு கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். மாமல்லபுரம் டி.டி.டி.சி. விடுதி கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் ராஜேஷ்குமார் பேசிக் கொண்டிருக்கும்போது, த.வெ.க. வை சேர்ந்த பெண் நிர்வாகி ஒருவர் அமைச்சரின் பேச்சை மறிக்கும் வகையில், செல்போனில் சுற்றி சுற்றி ரீல்ஸ் எடுத்துக் கொண்டிருந்தார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

